

# விரைவுக் குறிப்புகள்: COVID-19 தடுப்பூசிகள் மற்றும் கர்ப்பகாலம்

## COVID-19 தடுப்பூசி மற்றும் கர்ப்பகாலம் குறித்து பல தவறான தகவல்கள் இருக்கின்றன. சில அறியப்பட்ட உண்மைகளை நாம் இங்கே கவனிக்கலாம்!

**கர்ப்பகாலத்திற்கு முன்பு, கர்ப்பகாலத்தின் போது மற்றும் அதற்கு பின்பும் COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை.**
கர்ப்பகாலத்தில் தீவிர COVID-19 நோயில் இருந்து பாதுகாப்பு பெற, தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டும் என American College of Obstetricians and Gynecologists (ACOG, அமெரிக்க மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவக் கல்லூரி) மற்றும் Centers for Disease Control and Prevention (CDC, நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்) பரிந்துரைக்கின்றன.

**கர்ப்பமாக உள்ளவர்கள் COVID-19 தொற்றால் பாதிப்படைந்தால், தீவிர நோய் மற்றும் சிக்கல்களைப் பெரும் ஆபத்து அதிகம் இருக்கும்.**
கர்ப்ப காலத்தின் போது அல்லது அதற்குப் பிறகு COVID-19 காரணமாக தீவிர நோய்பாதிப்பைப் பெற்றால், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வெண்டிலேட்டர் தேவைப்படுதல், கர்ப்பகால சிக்கல்கள், முன்கூட்டிய பிரசவம் அல்லது குழந்தை இறந்து பிறத்தல் போன்ற ஆபத்துகள் அதிகரிக்கும்.

**COVID-19 தடுப்பூசிகள் பிறவி குறைபாடுகள், கர்ப்பச் சிதைவு, குறைபருவப் பிரசவம், குழந்தை இறந்து பிறத்தல் அல்லது பிற சிக்கல்களை ஏற்படுத்தும் என்று கூற எந்த ஆதாரங்களும் இல்லை.**
இருந்தாலும், COVID-19 நோய் இந்த சிக்கல்களை ஏற்படுத்துவதாக அறியப்படுகிறது.

**நீங்கள் தாய்ப்பால் கொடுத்தாலும் தடுப்பூசி பெறுதல் பாதுகாப்பானது.**
தடுப்பூசிக்குத் தகுதி பெரும் 6 மாத காலம் வரை, உங்கள் குழந்தையை COVID-19 தொற்றில் இருந்து பாதுகாக்கத் தேவையான ஆன்டிபாடிகளைத் தாய்ப்பால் பரிமாற்றும்.

### ஆதாரவளங்கள்:


கர்ப்பகாலத்தில் அல்லது தாய்ப்பால் கொடுக்கையில் COVID-19 தடுப்பூசிகள் (cdc.gov) | https://www.cdc.gov/coronavirus/2019-ncov/vaccines/recommendations/pregnancy.html (ஆங்கிலம், ஸ்பானிஷ், கொரியன், வியட்னாமீஸ் மற்றும் சீன மொழியில் மட்டும்)

கர்ப்பணிகள் மற்றும் சமீபத்தில் கர்ப்பமானவர்கள் | CDC | https://www.cdc.gov/coronavirus/2019-ncov/need-extra-precautions/pregnant-people.html (ஆங்கிலத்தில் மட்டும்)

COVID-19 தடுப்பூசி மற்றும் கர்ப்பகாலம்: நீங்கள் அறிந்துக்கொள்ள வேண்டியவை | Johns Hopkins Medicine | https://www.hopkinsmedicine.org/health/conditions-and-diseases/coronavirus/the-covid19-vaccine-and-pregnancy-what-you-need-to-know (ஆங்கிலத்தில் மட்டும்)


Washington State Department of Health

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

Vaccinate WA

CovidVaccineWA.org

DOH 825-049 July 2022 Tamil